**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No. 1127/2023**

**Deposition of PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பாண்டியன் | **Age** | : | 68/2026 |
| **Father's Name** | : | திரு. சுப்பையா | **Religion** | : | இந்து |
| **Village** | : | அழகர்நாயக்கன்பட்டி | **Calling** | : | கமிசன் வியாபாரம் |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10/07/2026.**

எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**சாட்சி மனு எண் 1037/2026ன் கீழ் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

7) எதிரியின் மனைவி பெயர் சாருமதி என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சிவனேசன் என்பவர் எதிரியின் அக்கா மகன் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு பாரத ஸ்டேட் வங்கி தேவாரத்தில் மட்டும்தான் வங்கி கணக்கு உள்ளது. எனது வங்கி கணக்கு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். 21.11.2025 ஆம் தேதி ரொக்க பரிவர்த்தனை ஒப்பந்தம் என ஊரார் முன்னிலையில் நானும் எதிரியும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றால் சரிதான்.

8) மேற்படி ஆவணத்தின் அசல் ஆவணம் என்னிடம்தான் உள்ளது என்றால் சரிதான். அதில் ஆறு லட்சம் ரூபாய் நான் கொடுத்ததாக சொல்லி நான்கு லட்சம் ரூபாய் திரும்ப பெற்றுக் கொண்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல

மூன்று லட்சம் ரூபாய் திரும்ப பெற்றுக் கொண்டதாக சொல்லி உள்ளேன். ராமையா மகன் ஐயப்பன், ராசு மகன் விக்னேஸ்வரன், பாஸ்கரன் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் அவர்கள் கையொப்பம் செய்த விபரம் எனக்கு தெரியாது.

9) அந்த ரொக்க பரிவர்த்தனை ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார் இறந்த தேதி ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. 28.3.2024 ஆம் தேதி எனது தாயார் இறந்த தேதி அன்றுதான் எதிரியின் மனைவி ரூபாய் 50,000 பணம் அனுப்பினார் என்றால் அன்றைக்கு இல்லை. நான் கேட்டுக் கொண்டதால்தான் பணம் அனுப்பினார் என்றும் மல்லித்தழைக்காக பணம் அனுப்பவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

10) 21/11/2025 ஆம் தேதி ரூபாய் 2 லட்சம் பணம் சிவனேசன் என்பவர் எனது வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பினார் என்றால் சரிதான். மீண்டும் 6.3.2026 ஆம் தேதி சிவனேசன் ரூபாய் 80 ஆயிரம் பணம் எனது வங்கிக் கணக்கிற்கு அனுப்பினார் என்றால் சரிதான். அதேபோல் 8.3.2026 ஆம் தேதி ரூபாய் 20000 பணம் சிவனேசன் எனது வங்கிக் கணக்கிற்கு அனுப்பினார் என்றால் சரிதான். மீதி பணத்தை கொடுத்தால் வழக்கை வாபஸ் வாங்கிக்கொள்ள தயாராகதான் உள்ளேன்.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.10 18:11:11 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**